*15*

# இயேசுவின் மரணம்

## மத்தேயு 27:50; மாற்கு 15:37; லூக்கா 23:46; யோவான் 19:30

*“இயேசு: ‘பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்’ என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்” (லூக்கா 23:46).*

மற்ற மதங்கள் கொண்டிராத மற்றும் கொண்டிருக்க முடியாத எதை கிறிஸ்தவம் கொண்டுள்ளது? இயேசு கிறிஸ்து மற்றும் அவரது சிலுவை! நமது பாவங்களுக்காக இயேசுவின் பலியின்றி தேவன் மனிதரை இரட்சிக்க முடியாது, அவ்வாறு அவர் செய்ய மாட்டார். கிறிஸ்துவில் ஜீவித்திருப்பவர்களுக்கு நியாயத்தீர்ப்பு என்பது தீர்க்கப்பட்டாயிற்று. இரட்சிப்புக்கு வெளியே இருப்பவர்களுக்கு நியாயத்தீர்ப்பு இன்னும் வரவேண்டியதாக உள்ளது.

சிலர் “மலிவான கிருபை” பற்றிப் பேசுகின்றனர், ஆனால் “மலிவான கிருபை” என்று ஒன்றும் இருப்பதில்லை. கிருபையானது தேவனுடைய கோபத்தைக் காணாது விடுவதோ, மறந்து போவதோ, அல்லது அதை மறுபடி எடுத்துப்போடுவதோ இல்லை. கிருபையானது பாவத்திற்கான விலையை, பரிகாரத்தை, மற்றும் தண்டனையை உறிஞ்சிக் கொள்கிறது. ஒவ்வொரு பாவியும் மற்றும் ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்பட வேண்டியதாக உள்ளது - கிறிஸ்துவுக்குள் அல்லது நரகத்தில். தேவனுடைய ஒவ்வொரு விஷயமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது; கிறிஸ்துவுக்குப் புறம்பே ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எதுவும் இருப்பதில்லை (எபேசியர் 1:3).

### இயேசு மரித்தார்

தேவன் தேவனாக இருக்கிறதினால், தேவன் மரிக்க இயலாது - இருப்பினும் இயேசு மரித்தார்! *அவரது* மரணத்தைக் குறித்து, நாம் அவர் மரித்தார் என்பதையும் அவர் *ஏன்* மரித்தார் (நமது பாவங்களுக்கு) என்பதையும் அறிய வேண்டும். அவர் *எவ்வாறு* மரித்தார் என்பதன்மீதே பெரும்பாலும் கவனக்குவிப்புள்ளது.

இயேசு எவ்வளவு விரைவாக மரித்தார் என்பது பற்றிப் பிலாத்து அதிர்ச்சியடைந்தான் என்பதை நாம் அறிகிறோம் (மாற்கு 15:44). இருப்பினும், அவர் மரித்திருந்தார் என்பது பற்றி அவன்

சந்தேகப்படவில்லை. இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்ட மற்ற இருவரின் மரணத்தை விரைவுபடுத்த அவர்களுடைய கால்களை முறிக்க வேண்டியிருந்தது (யோவான் 19:31-34). பரிசுத்த ஆவியால் ஏவப்பட்ட சுவிசேஷ எழுத்தாளர் இந்தத் தகவலை உள்ளடக்க வேண்டியிருந்தபடியால், இதை நாம் அறிவது முக்கியம் என்று அவர் நினைத்திருக்க வேண்டும். இயேசு உண்மையிலேயே மரித்தார் என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சிலர் இயேசு சோர்வினால் மரித்தார் என்று நினைக்கின்றனர். அவர் யூதத்துவ மற்றும் ரோம விசாரணைகளினால் தூக்கம் கெட்டு, குறைவாகப் போஷிக்கப்பட்டு மிருகத்தனமாக நடத்தப்பட்டிருந்தார். இந்த விசாரணைகளின்போது இயேசு சுமார் 2.6 மைல்கள் தூரம் நடந்தார் என்று ஒரு கல்வியாளர் முடிவு செய்துள்ளார். கடுமையான சவுக்கடியை மறந்துவிடாதீர்கள். சோர்வுற்ற இயேசு தமது சிலுவையைச் சுமக்கக் கூடாதிருந்தார்.

மற்றவர்கள் இயேசு இருதயம் உடைந்ததால் இறந்தார் என்று நினைக்கின்றனர். அவர் உடல்ரீதியாக சக்தியற்றுப் போய் உணர்வுரீதியாக சகலத்தையும் இழந்தவராக இருந்தார். இயேசு தம்மீது தேவனுடைய பரிசுத்த கோபம் ஊற்றப்பட்டதைப் பெற்றுக்கொண்டிருந்தார். ஒரு அப்போஸ்தலர் அவரைக் காட்டிக் கொடுத்திருந்தார், இன்னொரு அப்போஸ்தலர் அவரை மறுதலித்திருந்தார். யோவான் தவிர மற்ற அப்போஸ்தலர்கள் அவரைக் கைவிட்டிருந்தனர். மனிதரீதியாகப் பேசுவதென்றால், இயேசு தனிமையில் விடப்பட்டிருந்தார். “அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை” (யோவான் 1:11).

இன்னும் மற்றவர்கள் இயேசு இருதயம் சிதைந்ததால் இறந்தார் என்று நினைக்கின்றனர். அவரது விரைவான மரணமானது பேரழிவான முடிவு நிகழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகிறது.

ஒரு சில மனிதர்கள்தான் இயேசுவைக் காட்டிலும் அதிகம் தவறாக நடத்தப்பட்டுள்ளனர். அவர் இருதயம் சிதைந்ததாலோ அல்லது சுவாசக் குறைவினாலோ எப்படி மரித்திருந்தாலும், அவர் *எவ்வாறு* மரித்தார் என்பதல்ல ஆனால் அவர் *மரித்திருந்தார்* என்பதே வலிவான உண்மையாக உள்ளது. ரோமச்சேவகர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குற்றவாளிகள் நிச்சயமாகவே மரணம் அடையும் வரையில் விட்டுச் செல்லவில்லை. இயேசு மரித்தார் என்பது உண்மையே!

## இயேசு எனக்காக மரித்தார்

கிறிஸ்து நமக்காக வாழ்ந்தார் என்றோ அல்லது நமக்காக ஊழியம் செய்தார் என்றோ வேதாகமம் ஒருக்காலும் கூறுவதில்லை, ஆனால் இயேசு நமக்காக மரித்தார் என்பதை வேதாகமம் வலியுறுத்துதலுடன் அறிவிக்கிறது. அவர் நமது அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டார் என்று ஏசாயா கூறினார் (ஏசாயா 53:5). சிலுவையானது பாவத்தின்

*பிரச்சனைக்குத் தேவனுடைய பதிலை அளிக்கிறது.*

*இயேசு மரித்திருந்தார் என்று பிலாத்து உறுதிப்படுத்திக் கொள்ளாத வரையில் அவன் அவரது சரீரத்தை அடக்கம் பண்ண ஒப்புக்கொடுத்திருக்க மாட்டான் (மத்தேயு 15:44-47). இயேசு மரித்திருந்தார் என்பதை அவன் ஒருக் காலும் சந்தேகிக்கவில்லை. இயேசுவின் மரணம் வரலாற்று ரீதியானதாக உள்ளது (நடப்பு). எனக்காக இயேசுவின் மரணம் என்பது தனிப்பட்டதாக உள்ளது (இரட்சிப்பு). இயேசு மரித்தார் என்று விசுவாசித்தால் மாத்திரம் போதாது; இயேசு எனக்காக மரித்தார் என்று நான் விசுவாசிக்க வேண்டும்! சிலுவையில் இயேசு செய்த ஒவ்வொன்றையும் அவர் எனக்காகச் செய்தார்! தேவன் என்மீது அன்புகூருகிறார், அவர் என்னை விரும்புகிறார் (யோவான் 3:16)! அதைப் பாடுங்கள். ... அதை உரத்துக் கூறுங்கள். ... "எனக்கு ஒரு இரட்சகர் இருக்கிறார்!"*

*பின்வருவதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: ஒவ்வொரு நாளும் சுவிசேஷத்தை உங்களுக்கு நீங்களே பிரசங்கித்துக்கொள்ளுங்கள். உங்களை இரட்சிக்க ஒரு சிலுவை தேவைப்பட்டது; உங்களை இரட்சிப்பில் காத்துக் கொள்ள ஒரு சிலுவை தேவைப்படுகிறது. கிருபையின் ராஜரீகத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.*

> *உங்களால் கிருபையை சம்பாதிக்க இயலாது - அது ஒரு கொடையாக உள்ளது.*
> *உங்களால் கிருபையை வாங்க இயலாது - அது விற்பனைக்கானது அல்ல.*
> *உங்களால் கிருபையை தகுதியாக்க முடியாது - அது தகுதியற்றதாக உள்ளது.*
> *உங்களால் கிருபைக்குப் பதில் செலுத்த இயலாது - அது கடனை உண்டாக்குவதில்லை.*
> *கிருபையானது ஒவ்வொன்றையும் மாற்றுகிறது - அது இரட்சிப்பைக் கொண்டு வருகிறது!*

*எனது பாவங்களுக்காக இயேசு மரித்தார் (1 கொரிந்தியர் 15:1-4)! சிலுவையைப் பற்றிய ஒரு பிரசங்கத்தை ஒரு சிறுமி கேள்வியுற்றாள். பிரசங்கித்தவரிடம் அவள், "உலகத்தில் வேறு எதைக்காட்டிலும் அதிகமாக நீங்கள் அவரில் அன்புகூரவேண்டும், ஏனெனில் உங்களுக்காக அவர் எல்லாவற்றையும் செய்திருக்கிறார்" என்றாள். ஆம், நாம் அவ்வாறே செய்ய வேண்டும்!*

*தகுதியற்றவர்கள் மீது அன்பு என்பது நிபந்தனையற்றதல்ல; பாவிகள் "தூரதேசத்திலேயே" இருந்து கொண்டிருந்தால் அவர்கள் இரட்சிக்கப்பட இயலாது (லூக்கா 15). இரட்சிப்பு என்பது தகுதியான கிரியைகளினால் ஏற்படுவதில்லை, இருப்பினும் கிறிஸ்தவ அன்பு என்பது நற்கிரியைகளில் வெளிப்படுத்தப்படுகிறது (எபேசியர் 2:8-10). அதிகாரத்துவமான அன்பு என்பது நிபந்தனைகளை ஏற்படுத்துகிறது; அதன் நிபந்தனைகள் சிறு பிள்ளைகளுக்கானது அல்ல. கிறிஸ்தவம் என்பது ஒரு கொடையாக உள்ளது, அது ஒரு பேரமாக இருப்பதில்லை. அது இயேசுவின் ஜீவனை விலைசெலுத்திப் பெறப்பட்டது; அது நமது வாழ்வையும் விலையாகக்*

*கேட்பதாக உள்ளது. கிருபை என்பது ஒரு புட்டியில் உள்ள பூதம் அல்ல; கிருபை என்பது சிலுவையாக உள்ளது. சீஷத்துவம் என்பது பெரிய விலையுடன் வருகிறது - அது உங்கள் வாழ்வேயாகும். சிலுவையின்மீது இயேசுவின் அக்கறை அவர்மீதானதாக இருக்கவில்லை, நாமும் சுயநலமற்ற இந்த உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும்.*

*கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது யார்? நானே அதைச் செய்தேன்! இயேசுவைச் சிலுவையில் ஆணியடித்தது யார்? நானே அதைச் செய்தேன்! கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றிற்கு நாமே காரண மானோம் என்பதை நாம் புரிந்துகொள்ளாத வரையில் அவர் நமக்காகச் செய்தவற்றை நாம் புரிந்துகொள்ள இயலாது! பாவம் என்பது ஆவிக்குரிய வகையில் கலகமாக உள்ளது. அது அழிவுக்குரியதாகவும் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரிப்பதாகவும் உள்ளது (ஏசாயா 59:1-3). நமக்கு நாமே செய்துகொள்ள இயலாதவற்றைக் கிறிஸ்து நமக்காகச் செய்தார். கிறிஸ்து இல்லையேல், நாம் நமது பாவங்களில் மரிக்க மட்டுமே செய்வோம். பேதுரு தமது உரையைக் கேட்டவர்கள்மீது கிறிஸ்துவை கொலை செய்த குற்றத்தைச் சாட்டினார் (நடபடிகள் 2:22-36). அதை அவர்கள் பௌதீகரீதி யாகச் செய்திருந்தனர்; அதை நாம் ஆவிக்குரிய வகையில் செய்திருக்கிறோம். நாம் கிருபையின் மகிமையை ஏற்றுக்கொள்வதற்கு பாவத்தின் ஆழத்தைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். மக்கள் கிறிஸ்துவுக்குள் மனமாற்றப்படா திருந்தால், அவர்கள் கிறிஸ்தவத்தை முயற்சிசெய்தும் தோல்வியுற்றதாக நினைக்கலாம்; அவர்கள் முயற்சி செய்யவே இல்லை என்பதே உண்மை யாகும். உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் ஒரு எதிர்காலத்தைத் தருவதற்கு, நீங்கள் அவர்களுக்குச் சிலுவையைத் தாருங்கள். சிலுவையில் அறையப்படுதல் என்பது உலகத்தின் படைப்பை, நமது தற்கால வாழ்வை, மற்றும் நமது எதிர்காலத்தை விளக்குகிறது. "என்னிமித்தமே அது நடக்க வேண்டியிருந்தது" என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக்கொள்ள வேண்டும்.*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*